*Government of Puducherry*
*Lieutenant Governor's Secretariat*

**No. LGS/PRO/2021** **5th January 2021**

<u>பத்திரிக்கை குறிப்பு</u>

இன்று ஒருவருக்கொருவருடனான ஆய்வு கூட்டம் உள்ளாட்சித் துறை செயலாளர் திரு ஜெயந்த குமார் ரே மற்றும் திரு மலர்க்கண்ணன், இயக்குனருடன் நடந்தது. அதில் மத்திய நிதியளிப்பு திட்டங்களான (Centrally Sponsored Schemes) அம்ருட் (AMRUT), பொலிவுறு நகரம் (Smart City) மற்றும் தூய்மை இந்தியா (Swachch Bharat) பற்றி ஆய்வு செய்யப்பட்டது. வருகின்ற ஜனவரி 12ஆம் தேதி இதன் முன்னேற்றங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

புதுச்சேரி மற்றும் உழவர்கரை மாநகராட்சிகளின் ஆணையர்கள் தினமும் அவர்களுடைய கீழ்நிலை அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டி அன்றாட பணிகளைப் பற்றி விவாதித்து செயல்படுத்திட வேண்டும்.

ஆணையர்கள் தினமும் வீதி நடை (Street Walk) மேற்கொள்ள வேண்டும். அப்பொழுது தென்படும் குடிமை பிரச்சனைகளை அவ்வப்பொழுதே களைந்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பயன் பெற்று கழிவறை கட்டாதவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கி கழிவறையை கட்டிட உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிலுவையில் உள்ள வருவாய்களை வழுசூல் செய்திட உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.